Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 23 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியுல் அவ்வல் பிறை 06 (09-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 302

A/L Day Class
(விஞ்ஞானம்)
புதிய 2ம் பிரிவு
ஆரம்பம்: 5-11-86
காலை 8-15
Bond INSTITUTION JAFFNA.

A/L சனி - ஞாயிறு வகுப்புகள்
8-30 PHYSICS
மின்னியல்
Mr. நந்தகுமார் B.Sc.
12-30 ZOOLOGY
முளையவியல்
Mr. ஈசன் B.Sc.
ஆரம்பம்:- 9-11-86
BOND INSTITUTION JAFFNA.

# பிரபா, பாலசிங்கம் கைதாகி விடுதலை

# கவலைப்பட ஒன்றுமில்லை!

சென்னை, நவம்பர் 9

**தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், அவரின் முக்கிய பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் நேற்றுக் காலை சென்னைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.**

**விசாரணையின் பின்னர் பிற்பகல் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.**



பிரபாகரன்



பாலசிங்கம்

அவர்களுடன் சேர்த்து கைதுசெய்யப்பட்ட 30 போராளிகளும் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"இவ்விஷயம் பற்றி கவலைப் படுவதற்கு ஒன்றுமே இல்லை"- என்று அந்தப் பொலீஸ் அதிகாரி மேலும்தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக வேறு தகவல்களைக் கொடுக்க அந்தப் பொலீஸ் அதிகாரி மறுத்துவிட்டார்.

சென்னை இந்திரா நகரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் வைத்தே திரு பிரபாகரனும் திரு. அன்ரன் பாலசிங்கமும் கைது செய்யப்பட்டனர்.

சென்னை இந்திரா நகரில் உள்ள புலிகள் அலுவலகத்தில் இருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுடன் இன்னும் 30 பேரும் கைதாகினர்.

யு.என்.ஐ. செய்தியை ஆதாரம்காட்டி சென்னை வானொலி நேற்று (சனி) தனது பிற்பகல் 2-10 செய்தி அறிக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டது.

இதே வேளை -

ஏனைய போராளி அமைப்புக்களின் தலைவர்களும் சென்னைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று பிந்திக் கிடைத்த ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

## ராஜீவ்—ஜே. ஆர். சந்திப்பு 15 ஆம் திகதி

சென்னை. நவ. 8

ஜனாதிபதி ஜெயவர்த்தன — பிரதமர் ராஜீவ் சந்திப்பு பெங்களூரில் இம்மாதம் 15 ஆம் திகதி இடம்பெறும்.

15ஆம் திகதி காலை திரு. ஜெயவர்த்தன பெங்களூர் போய்ச் சேருவார்.

## கடத்தலை கண்டித்து புலிகள் அறிக்கை

### மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணுமற்போன சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தனர்.

அறிக்கை விவரம் வருமாறு:-

யாழ் பல்கலைக் கழக மாணவன் கடத்தப்பட்டதை நாம் மிகக்கடுமையாக கண்டிக்கும் அதே வேளை கடத்தப்பட்ட மாணவனை மீட்பதற்கான எமது முழு முயற்சிகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் முழு ஆதரவை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஒருசில தீயசக்திகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

எமது ஸ்தாபனரீதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களை விடுவிக்க

## கிட்டு-கொத்தலாவலை இன்று பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், நவ.9

அடம்பன் மோதலின்போது கைதிகளாகப் பிடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ சிப்பாய்கள் இருவரதும் நிலை இன்று தெரிய வரும் என நம்பப்படுகிறது.

இந்த இருவரையும் விடுதலை செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த நிபந்தனை இன்று ஏற்றுக்கொள்ளப்படலாம்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். தளபதி கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கப்டன் கொத்தலாவலையும் கேர்ணல் விஜயசேகராவும் இன்று விடுதலைப் புலிகளின் பிரதான முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளார்கள். (ஒ)

# வல்வையில் 2 ஆம் நாளாக கடும் சமர்

### 5 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

வல்வை செய்தியாளர் சி. சுந்தரலிங்கம்

வல்வெட்டித்துறை நவ 9

வல்வெட்டித்துறையில் நேற்று இரண்டாவது நாளாக ஆயுதப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 5 இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

புலிகள் தரப்பில் இரண்டு பேர் காயமடைந்தனர் என்று தெரிய வருகின்றது.

இது பற்றி அறியவருவதாவது:-

நேற்றுக் காலை 6 மணி அளவில் புலிகளின் முகாம் மீது ஆயுதபடையினர் மும்முனைத் தாக்குதலை நடத்தினர். அப்போது கடற்பகுதியில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டபடி இருந்தன.

அப்போது கடற்படையின் சிறு கப்பல்கள் பொருள்களுடன் இராணுவ முகாமை நோக்கி முன்னேறத் தொடங்கின.

அச்சமயம் புலிகள் 6 அங்குல 151 மோட்டோர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். கடற்படையினர் பின்னர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

அப்போது வல்வை இராணுவ முகாமின் கிழக்குப் பக்கமாக சிப்பாய்கள் ஷெல் அடித்தபடி வேகமாக வெளியே வர முயற்சித்தனர்.

புலிகள் றொக்கட் லோஞ்சர்கள் மூலம் மோட்டோஷெல் தாக்குதலை மேற்கொண்ட போது அந்தச் சிப்பாய்களில் 5 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

உடல் சிதறிய நிலையில் கிடந்த சிப்பாய்களின் சடலங்களை சக சிப்பாய்கள் முகாமுக்குக் கொண்டு சென்றனர்

இந்த நிலையில் இராணுவ முகாமில் இருந்து காலை 11 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் ஆரம்பித்தன.

அதே வேளை கடற்படையினர், மீனவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# விஜிதரன் கண்டுபிடிக்கப்படாவிடில் விபரீத விளைவுகள் ஏற்படும்

### செய்தியாளர் மாநாட்டில் துணைவேந்தர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

காணுமற்போன பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கண்டுபிடிக்கப்படவேண்டும். இல்லாவிடில் பல விபரீத விளைவுகளும் சச்சரவுகளும் உண்டாகி உயர் கல்விக்கு மட்டுமன்றி பொதுமக்கள் வாழ்க்கைக்கு பாதிப்பும் ஏற்படுத்தும்.

இப்படி யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக் கழக வர்த்தக பீட மூன்றும் வருட மாணவன் விஜிதரன் காணுமற்போன சம்பவம் தொடர்பாக இச் செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது.

விஜிதரனின் தந்தையான மட்டக்களப்பு உதவித் தொழில் ஆணையாளர் திரு. த. அருணகிரிநாதனும் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

அச்சமயம் திரு. வித்தியானந்தன் மேலும் சொன்னதாவது;

கடந்த செவ்வாய் முதல் காணுமற்போன

(4ஆம் பக்கம் பார்க்க)



அவை கவலைப்பட ஒண்டுமில்லை எண்டு சொல்லிப் போட்டினம், இஞ்சை கொழும்பிலை ஏதோ பெரிசா எல்லாம் கற்பனை பண்ணிக் கதை விடுகினம் தெரியாதே..?

## தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணுமற்போனது தொடர்பாக தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

கடந்த சில தினங்களாக யாழ். பல்கலைக் கழக வர்த்தகபீட மாணவன் விஜிதரன் காணுமல் போனதையிட்டு மக்கள் மத்தியில் நிலவி வரும் விரக்திநிலைமையையிட்டு தமிழ் ஈழ ராணுவமாகிய நாம் வருந்துகின்றோம்.

அதேவேளையில் இப்படிப்பட்ட நிலை தொடருமாயின் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு இது ஒரு மழுங்கடிப்புச் சக்தியாக விளங்கும் என்று எச்சரிக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 7 வயதுச் சிறுமி மரணம்

### பலர் காயம், வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை,நவ.9

வல்வெட்டித்துறையில் நேற்று முப்படையினர் மேற்கொண்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் பலர் காயமடைந்தனர். 7 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இறந்த சிறுமி, கெருடாவிலைச் சேர்ந்தவர்.

உடுப்பிட்டி வாசியான 69 வயதுடைய ஒருவர் படுகாயமடைந்தார்.

மண்டான், இமையாணன் பகுதிகளில் படையினரின் தாக்குதல் காரணமாக பொதுமக்கள் சிலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஷெல் தாக்குதலுக்குள்ளான வீடுகள்சில எரிந்து கொண்டிருக்கக் காணப்பட்டன. (இ-எ-160)

## தவறிழைத்திருந்தால் மன்னித்து விஜிதரனை என்னிடம் ஒப்படையுங்கள்

### தந்தை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 9

தவறு ஏதும் விட்டிருந்தால் மன்னித்துக் கொண்டு விஜிதரனை தன்னிடம் ஒப்படைக்கும்படி உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார் தந்தை திரு. த. அருணகிரிநாதன்.

திரு. அருணகிரிநாதன் மட்டக்களப்பில் உதவித் தொழில் ஆணையாளராகப் பணியாற்றி வருகிறார்.

நேற்று துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திரு. அருணகிரிநாதனும் கலந்து கொண்டே இந்த உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

4 பெண்களும் 2 ஆண்களும் கொண்டது என் குடும்பம். விஜிதரனே என் மூத்தமகன்.

இவரின் படிப்பில்தான் எனது குடும்பத்தின் எதிர்காலமே தங்கியுள்ளது.

இம் மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் கொழும்பில் ஐ. சி. எம். ஏ. கணக்காளர் சோதனை நடைபெற உள்ளது. விஜிதரன் இச் சோதனை எடுக்கிறார்.

அவரை கொழும்புக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லவே நான் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தேன். அப்போதுதான் விஜிதரன் காணுமற்போன விஷயம் எனக்குத் தெரிய வந்தது. இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

1985 நவம்பர் 13இல் மட்டக்களப்பில் எனது மகன் விஜிதரன் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். பின்னர் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி மகனை யாழ்ப்பாணத்தில் தங்க ஒழுங்கு செய்தேன்.

இப்படி திரு. அருணகிரிநாதன் தெரிவித்தார். (இ-எ)

## வெளிநாட்டு முகவர் நிலையங்கள் குறித்து

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

வெளிநாடு பயணம் செய்வோரை எச்சரிக்கையாக இருக்கும்படி ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

அறிக்கையின் சாரம் வருமாறு;

எமது சட்ட திட்டங்களுக்கேற்ப இயங்கக்கூடிய முகவர் நிலையங்களுக்கு மட்டும்தான் ஒத்திசைவுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஆகவே நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் பாஸ்போட்டையோ அல்லது பணத்தையோ வெளிநாடு செல்லும் நோக்கில் முகவர் நிலையங்களுக்கு செலுத்துபவர்கள் அந்த முகவர் நிலையங்கள் எமது ஒத்திசைவுப் பத்திரங்களைப் பெற்றிருந்தால் மட்டும் செலுத்தும்படியும் ஏனையவர்களிடம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 15 ஆம் திகதி வரை எமது ஒத்திசைவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் போலியானவர்கள் என கருதப்பட்டு அவர்கள் மேல் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்,

மேலும் ஒத்திசைவுப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ள தகுதி அற்றவர்களும் மக்களை மோசடி செய்தவர்களுமான மூன்று முகவர் நிலையங்கள் எம்மால் மூடப்பட்டுள்ளன.

## யாழ். ஆஸ்பத்திரி வழமை நிலையில்

யாழ்ப்பாணம், நவ 9

கடந்த திங்கட்கிழமை முதல் ஸ்தம்பித்து இருந்த யாழ் ஆஸ்பத்திரி சேவைகள் அனைத்தும் நேற்று வழமைக்குத் திரும்பின.

நேற்று சகலகிளினிக்குகளிலும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

மருத்துவ மாணவர்களுக்கு ஆஸ்பத்திரியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த 9 பேர்

பருத்தித்துறை, நவ.9

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற ஷெல், ஹெலிக்கொப்டர் தாக்குதல்களில் 9 பேர் காயம் அடைந்து பருத்தித்துறை அரசாங்க வைத்தியசாலைக்கு இளைஞர்களால்கொண்டுவரப்பட்டனர்.

இந்த 9 பேரில் ஐவர் பின்பு யாழ் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த ஒன்பது பேரில் 92 வயது நிரம்பிய திருமதி இராசா இராசம்மா என்பவரும் ஒருவர். இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்.

வல்வைத் தாக்குதலில் காயம் அடைந்த 9 பேர் விவரம் வருமாறு:-

1. என்.அருள் (வயது 22) வல்வெட்டித்துறை,
2. எஸ்.சங்கர் (வயது 17) வல்வெட்டித்துறை,
3. ரி. மனோகரன் (வயது 23) வல்வெட்டித்துறை.
4. செல்வி யசோதா உமா மகேஸ்வரன் (வயது 4) பொலிகண்டி,
5. திருமதி. இராசா இராசம்மா (வயது92) உடுப்பிட்டி,
6. கே. பரமு (வயது 18) வல்வெட்டித்துறை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிதியும் மக்கள் கண்ணோட்டமும்

### தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ.9

போர் நிதியும் — மக்கள் கண்ணோட்டமும் என்ற தலைப்பில் தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதன் விவரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க எத்தனையோ போராளிகளை இழந்திருக்கும் இவ்வேளையில், சில தீய விஷமிகள் திட்டமிட்டுப் பல வதந்திகளைப் பரப்பி வருகிறுகள்.

இது விடுதலை பற்றிய உத்வேகத்தையும் மன எழுச்சிகளையும் பாதிக்க ஏதுவாவதுடன், இயக்கங்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகளையும், மோதல்களையும் உண்டாக்குகிறது.

இந்தவகையில் தமிழ் ஈழ ராணுவமாகிய எமது நடவடிக்கைகள் பல வகையில் விமர்சிக்கப்பட்டாலும், தமிழீழ மக்களின் பரிபூரண ஆதரவு இருக்கும்வரை நமது போராட்டமானது ஈழம் காணும் வரை தொடர்ந்தே தீரும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறு ஷெல் தாக்குதல்

பலாலி, நவ. 9

நேற்றுக் காலை 7-30 மணியளவில் தொண்டமானாறு முகாமில் இருந்து மேற்கு, வடமேற்குத் திசைகளாக ஷெல்கள் ஏவப்பட்டன.

தொண்டமானாறு — கீரிமலை வீதியைநோக்கி ஏவப்பட்ட ஷெல் "பாம் பீச்" பக்கமாக விழுந்து வெடித்தது.

தொண்டமானாறு — கீரிமலை வீதியால் அடிக்கடி பலாலிக்குச் செல்கின்ற இராணுவ நடமாட்டத்தைக் குறைக்க போராளிகள் நடவடிக்கை மேற்கொண்டபோதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## சுபநேரம்

09-11-1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்: 9.05 முதல் 10.35 வரை

ராகுகாலம்: 4.35 முதல் 6.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி முன்னிரவு 6.57 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் ஆதரவின் கீழ்

# பரதநாட்டியப் பயிற்சி நெறி

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையின் நடனக்குழுவினால் பின்வருபவர்களிடமிருந்து விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பரத நாட்டியப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்பிற்கு பெண்பாலார் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். அவர்கள் பின்வரும் தகைமைகளை உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

(1) வயது: 16 தொடக்கம் 22 வரை.

(2) கல்வித்தகைமை

(அ) க. பொ த. (சா. த) பரீட்சையில் சித்தியெய்தியவராயும், நடனத்தினை ஒரு பாடமாகக் கொண்டு விசேட சித்தி பெற்றவராயும் இருத்தல் வேண்டும். நடனக்கலையில் உயர் கல்வியை எதிர்நோக்கும் பிள்ளைகளுக்கு க. பொ. த. (சா. த.) இல் கணித பாடத்தில் சித்தி அவசியம் என்பதால், கணித பாடத்தில் சித்தி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த) இல் சித்தியும் வட இலங்கை கர்நாடக சங்கீத சபைப் பரீட்சையில், நடனம் – 3 ஆம் தரத்தில் விசேடசித்தி எய்தியவராயும் இருத்தல் வேண்டும்.

(3) இடமும், காலமும்:

இப்பயிற்சிவகுப்பு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பிரபல்யமான நடன ஆசிரியைகளாலும், யாழ் பல்கலைக் கழக நுண்கலைத்துறை பரதநாட்டிய ஆசிரியைகளினாலும் நடத்தப்படும்.

(4) விண்ணப்பங்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய மெற்றிக் அளவு அரைத்தாளில் தயார்செய்து 24.11.86ந் திகதிக்குப் பிந்தாமற் கிடைக்கத்தக்கதாக,

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ். மாவட்டக கலாசாரப் பேரவைத் தலைவரும்,
மாவட்டச் செயலாளரும்,
அரச அதிபரும், செயலகம்,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பப்படல் வேண்டும். இக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நடனக்கலை பயிற்சி வகுப்பு'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(5) பயிற்சி வகுப்புகளிற்குத் தகுதியுடையோர் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். தேர்ந்தெடுக்கப்படுவோர் அனுமதிக்கட்டணமாக ரூபா 50/–ம் மாதாந்தம் ரூபா 25/–ம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் நடனக்குழுவின் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய செலவினங்களிற்காக ஒரு சேமிப்பு நிதிக்கணக்கில் இடப்படும். ஆசிரியைகட்கு அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் பிரயாணச் செலவோ, வேறு எந்தப் படியுமோ இதிலிருந்து செலுத்தப்பட மாட்டாது பாடத்திட்டம், நேர அட்டவணை ஆகியன வகுப்பு ஆரம்பத்தினத்தன்று மாணவர்களுக்கு வழங்கப்படும்

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ். மாவட்ட
கலாசாரப்பேரவைத் தலைவரும்
மாவட்டச் செயலாளரும்,
அரச அதிபரும்.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

(1) முழுப் பெயர்:-
(2) (அ) தேசிய அடையாள அட்டை இல:
அல்லது
(ஆ) வேறு அடையாள அட்டை இல:
(3) முகவரி:
(4) பிறந்த ஆண்டு மாதம் திகதி: வயது:
(5) கல்வித்தகைமை
(க. பொ. த (சா. த) பரீட்சையில் சித்தியெய்திய விபரங்கள்)

| ஆண்டு: சுட்டிலக்கம்: | பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் விபரம்: | தரம்: |
|---|---|---|
| | 1. | |
| | 2. | |
| | 3. | |
| | 4. | |
| | 5. | |
| | 6. | |
| | 7. | |
| | 8. | |

(இரு அமர்வுகளில் சித்தியடைந்திருப்பின் அவற்றின் விபரங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுக)

(6) வட இலங்கை கர்நாடக சங்கீத சபையின் பரீட்சையில் சித்தியெய்தியவரா?
அப்படியாயின்
(அ) சித்தியடைந்த தரம்:
(ஆ) சித்தியடைந்த ஆண்டு:
(7) பாடசாலை அதிபரின் அல்லது பெற்றோரின் கையொப்பம்:
(8) விண்ணப்பதாரியின் கல்விசார் ஏனைய தகைமைகள்:

இப்பத்திரத்தில் கூறப்பட்டவை யாவும் உண்மையானவையெனவும், யாழ். செயலக கலாசாரப் பேரவையின் பிரமாணங்களுக்கமைந்து நடக்கச் சித்தமுடையேன் எனவும், இப்பயிற்சியிற் தொடர்ந்து பங்குபற்ற ஆயத்தமுடையேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
கையொப்பம்

திகதி:..............

சாம்பல்தீவு முகாம் பகுதியில்

# தென்னை, மா, பலா வேரோடு பிடுங்கப்படுகின்றன

திருகோணமலை, நவ 9
சாம்பல்தீவு கிராமத்தில் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள ஆயிரம்மீட்டர் பிரதேசம் புல்டோசர் மூலம் துப்புரவாக்கப்பட்டு வருகிறது.

வீடுகளைத் தவிர்த்து, தென்னை, மா, பலா ஆகிய பயன்தரும் மரங்கள் எல்லாம் வேரோடு புல்டோசரினால் பிடுங்கப்பட்டு வருகின்றன.

ஆயுதபடையினர்மேற் கொண்டுள்ள இந்த நடவடிக்கை சாம்பல் தீவு மக்கள் மத்தியில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சாம்பல்தீவு கிராமத்தில் இருந்துதான் திருமலைநகருக்கு மா, பலாப் பழம், தேங்காய் முதலியன வருகின்றன.

சாம்பல்தீவு மக்களின் வருமானம் இவற்றின் விற்பனையில்தான் தங்கியுள்ளது.

திருகோணமலை பிரசைகள் குழுவிடம் இது குறித்து சாம்பல் தீவு வாசிகள் முறையிட்டுள்ளனர். (இ-எ-150)

## அஞ்சலிக் கூட்டம்

வட்டுக்கோட்டை, நவ.9
சித்தன்கேணி பிளவத்தையில் இன்று(9-11-86) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மன்னார் மாவீரன் அமரர் விக்ரருக்கும், ரோமுக்கும் நினைவு அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறும்.
உள்ளூர் பிரமுகர்கள் பலர் இக்கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். (இ-161)

## சைவசமய பாடப் பரீட்சை

வட்டுக்கோட்டை, நவ 9
யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அகில இலங்கை ரீதியில் நடத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நாட்டிலுள்ள சகல பாகங்களிலும் நடைபெறும்.

3, 4, 5, 6 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை முற்பகல் 8. 30- 9.30 மணி வரையும்.

7, 8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை முற்பகல் 10.00- 11.30 மணி வரையும்.

9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை 10.15 – 12.15 மணி வரையும்.

10, 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை முற்பகல் 10.30- 1.30 மணி வரையும்.

12, 13 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சை 8.30-11.30 மணி வரையும் நடைபெறும். (இ-161)

## கலட்டி ஐ வி கழகம் வெற்றி

கரவெட்டி, நவ. 9
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடந்த சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் கலட் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவு வெற்றியீட்டியது.

கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவுக்கும் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவுக்கும் இடையே இடம்பெற்ற இப்போட்டியில் 6-4 என்ற கோல்களால் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

இதேவேளை கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக சி' பிரிவுக்கும் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக 'சி' பிரிவுக்கும் இடையில் இடம்பெற்ற இன்னுமொரு போட்டி 1 – 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றது (இ – 70)

## பிரயாண ஒழுங்குகள்

### ● டென்மார்க் ● ஜேர்மனி ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:
N.பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.

## வெடி மருந்து பார்சல்

கொழும்பு, நவ. 9
பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் வெடி மருந்துப் பார்சல் ஒன்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது
9 சுற்று வெடிமருந்து அடங்கிய பார்சல் ஒன்று வளாகத்தின் சட்டபீடத்திற்கு அருகில் உள்ள மலசலகூடத்தினுள்இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ-உ)

## புதிய கட்சி

கொழும்பு, நவ. 9
உதயமாகவிருக்கும் புதிய சிங்கள அரசியல் கட்சியின் பெயர், கொள்கைகள் இவ்வாரத்தில் அறிவிக்கப்பட உள்ளன,
பிரபல சட்டத்தரணி திரு ஏ. வி. குணரத்தின, டெடிகமத் தொகுதி முன்னாள் எம்.பி ருக்மன் சேனநாயக்க ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் புதிய கட்சியை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். (ஒ-எ-உ)

## கான்ஸ்டபிளை காணவில்லை

கொழும்பு, நவ.9
சியம்பலாங்குவ பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலீஸ் கான்ஸ்டபிள் சமரக்கோன் என்பவரை கடந்த வாரத்தில் இருந்து காணவில்லை என்று பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ-உ)

### விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழிகள், மொத்தமாக விற்பனைக்குண்டு. நல்ல இன மாங்கன்றுகள், பலாக் கன்றுகள் விற்பனைக்குண்டு. உடன்தொடர்பு கொள்ளவும், இளைஞர் விவசாயப்பண்ணை, [பழைய விமானி பாம்], கோப்பாய்.

### தேவை

எமது நல்லூர் கயிறு தயாரிக்கும் ஸ்தாபனத்திற்கு பயிலுனர்கள் தேவை. தொடர்பு- தேசிய தும்புத் தொழிற்சாலை 40, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

### சேவை

சுன்னாகத்தில்
K. S. B. கொழும்பு பஸ்சேவைக்கு ஆசனங்கள் பதிவுசெய்யப்படும். முகுந்தன் இன்டஸ்றீஸ் 75, K. K. S. வீதி. சுன்னாகம்.

## அளவெட்டியில் தடுப்பூசி

யாழ்ப்பாணம், நவ. 9
முன்அடைப்பான் என்று கூறப்படும் தொண்டை அடைப்பான் என்ற நோய்க்கு எதிராக மாடுகளுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் அலுவலகம் ஊடாக அளவெட்டி பகுதியில் நாளை 10ஆம்திகதி மேற்கொள்ளப்படவுள்ளது.

பின்வரும் நிலையங்களில் குறிப்பிட்ட நேரங்களில் இத்தடுப்பூசி இலவசமாக ஏற்றப்படும்.

விவரம்

காலை 9 முதல்10மணி; கலைவாணிசனசமூக நிலையம், அளவெட்டி தெற்கு.

காலை 10 மணி முதல் 11 மணி வரை: அளவெட்டி அருணோதயக்கல்லூரி.

காலை 11 மணி முதல் 12 மணி வரை அளவெட்டி கூட்டுறவுச் சங்க வளவில்.

பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரை: அளவெட்டி அளவொல்லை பிள்ளையார்கோயிலடி. (இ-எ)

மாகாண சபை பற்றி ஜனாதிபதிக்கு

## மகாநாயக்க தேரர் கூட்டாக மகஜர்

கொழும்பு, நவ. 9
உத்தேச மாகாண சபைகள் பற்றி மூன்று நிக்காயாக்களின் மகாநாயக்க தேரர்களும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு கூட்டாக ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர்.

மூன்று நிக்காயாக்களின் இணைப்புக் கமிட்டி எடுத்த தீர்மானங்களுக்கு அமையவே இம் மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளது.

அஸ்கிரி மகா வித்தியாலயத்தில் கடந்த புதன் கிழமை நடந்த வைபவம் ஒன்றில் மகாநாயக்க தேரர்கள் கையொப்பம் இட்டனர்.

மல்வத்தை மகா நாயக்க தேரர் வண சிரிமல்வத்தை ஆனந்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண பலிபான சந்தானந்த ஆகியோர் கையொப்பமிட்டவர்களில் முக்கியமானவர்கள். (இ-எ)

### அறிவித்தல்

யாழ். சைனீஸ் றெஸ்ரோறண்ட்
முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தாபனம்
இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும்
தொலைபேசி: 23460

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் ஐப்பசி மாதம் 27ஆம் நாள் (13-11-86) வியாழக்கிழமை காலை 8-20 மணி முதல் 10-30 மணி வரையுமுள்ள தனு லக்கின சுப முகூர்த்தத்தில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| பகீரதன் அவர்களுக்கும் | அனுஷா அவர்களுக்கும் |

இறைவன் திருவருளினால் யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்

| அ.இ. சிவகுருநாதன் தம்பதிகள் | ஆ. பத்மநாதன் தம்பதிகள் |
|---|---|
| 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். | 'பத்ம வாசம்', 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் வழங்கப்படவில்லை.


## இல்லத்தரசிகளே கவலை வேண்டாம்!

சில நொடிப்பொழுதில் தயாரித்துப் பரிமாறக்கூடிய சுவைமிக்க
''கீல்ஸ்'' (KEELS) உணவுப் பொருட்கள்
(HEAT AND SERVE PREPARATIONS)
கொழும்பு விலையில் யாழ்நகரில் !!

| CHICKEN | | |
|---|---|---|
| Breast | 1 kg. | 110-00 |
| Thighs | 1 kg. | 100-00 |
| Meat Balls | 200g | 18-50 |
| Sausages | 300g | 30-00 |
| BEEF | | |
| Meat Balls | 200g | 12-50 |
| Sausages | 400g | 27-00 |
| Corned Beef | 200g | 21 00 |
| PORK | | |
| Back Bacon | 200g | 25-50 |
| Strekary Bacon | 200g | 22-50 |
| Sausages | 400g | 31-00 |
| Pawkies | 300g | 26-00 |

| MISCELLANEOUS | | |
|---|---|---|
| Frank furters | 400g | 37-90 |
| Hamberger | 200g | 18-50 |
| Hot Dogs | 400g | 29-00 |
| Lunch en Meat Slices | 200g | 16 00 |
| Cooked Salami | 200g | 21-00 |

குறிப்பு:
* பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்ட வாகனத்தில் (FREEZER TRUCK) தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (COLD ROOM) சேமித்து வைக்கப்பட்டுள்ளது.
—எம்மிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்,
* மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

அங்கீகரிக்கப்பெற்ற வடமாகாண விநியோகஸ்தர்:-
The Medical Hall மெடிக்கல் ஹோல்
No. 224, Hospital Road, JAFFNA. Phone: 22575
இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22575

AGFA
LANKA PROCESSING LTD.
இன் வாரிசிலான கூட்டமைப்பில் உள்ள
HAYLEYS PHOTO PRINT LTD
என்னும் ஸ்தாபனத்தை
380, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் (அடைக்கலமாதாகோயில் அருகாமையில்) ஆரம்பித்துள்ளது.
AGFA COLOUR XR
அல்லது
AGFA COLOUR XR 100
புகைப்படச் சுருள்களில் இருந்து அஞ்சல் அட்டைப்பிரதி ஒன்றைப்பெற
ரூபா 4-50 மட்டுமே அறவிடப்படும்.
மற்றெல்லாப் புகைப்படச்சுருள்களில் இருந்து அஞ்சல் அட்டைப்பிரதி ஒன்றிற்கு ரூபா 6-00 அறவிடப்படும்.
STUDIOகளுக்கு அதிவிசேட கழிவுகள் உண்டு.
மூன்று நாட்களில் பிரதிகளைப் பெறலாம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒவ்வொருவனும் தன் சுய பிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத்தேடக்கடவன்.

— பைபிள்.


# உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

09-11-1986 த. பெ. இல. 23


## காலத்தால் செய்யும் உதவி

இந்த நாட்டில் தமிழர்கள் அகதிகளாவது சர்வசாதாரணம். அது எப்போதும் நடக்கலாம், எங்கும் நடக்கலாம் என்ற நிலை.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னரும் சிங்களப் பிரதேசங்களில் வசித்த தமிழர்கள் மட்டுமே அகதிகளாகும் நிலை இருந்தது. அவர்கள் தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்பி வந்து வாழக்கூடிய நிலை இருந்தது.

இப்போது அந்தநிலை முற்ருக மாறிவிட்டது. தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே – தாம் பிறந்து வளர்ந்த பிரதேசத்தில், பகுதியில், ஊரில், கிராமத்தில் வாழும் போதே — அகதிகள் ஆக்கப்படுகின்ருர்கள்.

தமது சொந்த ஊரில் உள்ள வீடு வாசல்களை, உடைமைகளை இழந்து வேறு ஊருக்கு, பிரதேசத்துக்கு அகதிகளாகப் போகும் அவலம் உண்டாகி இருக்கிறது.

இன்றைக்கு வசதியாக வாழ்ந்தவர் — தனது தொழிலைச் செய்து வாழ்க்கையை ஓட்டியவர் — நாளைக்கு அகதியாக பிறர் தயவை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உண்டாகும் காலம் இது.

தமிழ்ப் பிரதேசங்களில், ஊருக்கு ஊர் அரசாங்க ஆயுதப்படைகளின் முகாம்கள் நிறுவப்பட்டதாலேயே தமிழன் தனது மண்ணிலேயே அகதியாக வேண்டி உள்ளது.

தென்னிலங்கையில் குண்டர்கள் தமிழர்களின் உயிரைக் குடித்து, உடைமைகளைச் சூறையாடினுர்கள். தமிழ் மண்ணில் அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ படைகள் தமிழரின் உயிர்களையும், உடைமைகளையும் சூறையாடுகின்றன.

தென்னிலங்கையில் தமிழர்கள் தாக்கப்பட்டது சட்டவிரோதமானது — குற்றச் செயல் என்று ஏற்கப்பட்டது. ஆனுல் தமிழ்ப் பகுதியில் தமிழர்கள் தாக்கப்படுவது குற்றச் செயலாகக் கருதப்படவில்லை. பயங்கரவாத ஒழிப்புச் செயல் என நிலைநாட்டப்படுகிறது. சட்டத்துக்கு உட்பட்ட செயல் எனக் கணிக்கப்படுகிறது. குற்றத்துக்கு உரிய செயல் அல்ல என்று கணக்குக் காட்டப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற அரக்கத்தனமான போர்வையின் கீழ் கொலைகள், சித்திரவதைகள், மற்றும் அநியாயங்கள், மனித உரிமை மீறல்கள் யாவும் நியாயப்படுத்தப்படுகின்றன.

இந்த அக்கிரமத்தைத் தட்டிக் கேட்கும் நியாய சிந்தை தென்னிலங்கையிலும் இல்லை; வேறு நாடுகளிடமோ அல்லது சர்வதேச ஸ்தாபனங்களிடமோ இருப்பதாகவும் தெரியவில்லை.

'தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ருல் தம்பி தண்டப் பிரசண்டம்' என்பது முதுமொழி. அதனுல் ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களை தான் நினைத்தவாறு எல்லாம் அழித்தொழிக்கிறது.

மெலியாரை வலியார் வாட்டின் வலியாரை தெய்வம் வாட்டும். இதனை உணராமல் ஆணவமும், மமதையும் தலைக்கேறி ஸ்ரீலங்கா அரசாங்கத்தினர் — அதன் ஆட்சியாளர் — ஆட்சி அதிகாரத்தில் உள்ளோர் — தலைகால் புரியாமல் அசுரத்தனம் காட்டுகின்ருர்கள்.

இதனுல் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர்களே. குறிப்பாகத் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் அகதிகளாகி விட்டனர்.

அதனுல் அகதிக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களே ஈழத்தின் எதிர்காலச் சந்ததியினர். அவர்களின் கல்வி பாதிக்கப்பட்டால் வாழ்க்கையே இருண்டு விடும்.

அவர்களது கல்வி நலனில் அக்கறை காட்டி உதவ வேண்டியது தேசபக்தியுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும். அவரவர் தங்களுக்கு இயன்றவரையாவது அகதி மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

இந்த வகையில், வன்செயலினுல் பாதிக்கப்பட்ட ஜீ. சீ. ஈ. சாதாரண தர மாணவருக்கு, யாழ். பரியோவான் கல்லூரி 'இன்டராக்ட்' கழக மாணவர்கள் உதவ முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கது.

ஜீ. சீ. ஈ. சாதாரண தர கடந்தகால வினுப்பத்திரங்களைச் சேகரித்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்க 'இன்டராக்ட்' கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது.

'காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது' என்பது வள்ளுவர் வாக்கு.

'இன்டராக்ட்' கழக மாணவர்களுக்கு உதித்த நன்னோக்கம், ஏனைய மாணவர்களுக்கு மட்டுமன்றி, பெரியவர்களுக்கும் உண்டாக வேண்டும்.

# காஷ்மீர் சட்டசபை கலைக்கப்பட்டது

ஸ்ரீநகர், நவ. 8

ஜம்மு—காஷ்மீர் மாநில சட்டசபை கலைக்கப்பட்டது.

புதிய சட்டசபையைத் தெரிவு செய்யும் தேர்தல் 1987 மார்ச் மாதம் நடைபெறும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீர் தேசியப் பேரவைக் கட்சி — இந்திரா காங்கிரஸ் கூட்டரசு கடந்த வியாழன் பதவி ஏற்றது ஏற்கனவேதெரிந்ததே.

முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா தலைமையிலான புதிய அமைச்சரவையின் தீர்மானத்துக்கு இணங்கவே சட்ட சபையைக் கலைக்கும் உத்தரவை மாநில ஆளுநர் ஜக்மோஹன் பிறப்பித்தார்–

கலைக்கப்பட்ட சபை 1983ஜூன் மாதம் தெரிவானது. 2 ஆண்டுகள் 7 மாதங்கள் பதவியில் இருந்த பின்னர் சபையின் செயல்பாடு இடைநிறுத்தி வைக்கப்பட்டது. (இ-எ)

## நேருவின் உறுதி மொழிக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு தேவையில்லை என்கிருர் ராஜீவ்

புதுடில்லி, நவ. 8

ஹிந்தி மொழி பேசாத மாநிலங்களுக்கு நேருஜி அளித்த உறுதி மொழிக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்தில் சொன்னுர்.

நேருஜியின் உறுதி மொழிக்கு முரணுக தமிழ்நாட்டில் ஹிந்தி திணிப்பை நடத்த முயற்சிக்கப்படுகிறது என்று தி. மு. க. எம்· பி. திரு. கோபாலசுவாமி சுட்டிக்காட்டியபோது பிரதமர் மேற்கண்டவாறு சொன்னுர்.

நேருஜியின் உறுதி மொழியில் இருந்து எமது அரசு விலகிச்செல்லவும் இல்லை; விலகிச் செல்லும் எண்ணமும் அரசுக்கு இல்லை.

எனவே அந்த உறுதி மொழிக்கு அரசியல் சட்டப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டிய தேவை எழவில்லை—இப்படி பிரதமர் வலியுறுத்திக் கூறினுர். (இ – எ)

## அமெரிக்க மண்ணில் பயிற்சி

வாஷிங்டன், நவ. 8

நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளருக்கு அமெரிக்க மண்ணில் வைத்துப் பயிற்சி அளிக்கப்படலாம்.

இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு இராணுவ உதவிகள் வழங்குவதற்காக 10 கோடி டாலரை அமெரிக்க அரசு அண்மையில் ஒதுக்கியது குறிப்பிடத்தக்கது. (-எ)

## உலக நாடுகளுக்கும் விஸ்தரிப்பு

புதுடில்லி, நவ. 8

இலங்கையில் அரசு தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகளில்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்யக்கோரி அமெரிக்கா, பிரிட்டன், ஆவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளிலும் உண்ணு விரதப்போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஈழத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் (புரொடக்)தலைவர் எஸ். சி. சந்திரகாசன் செய்து வருகிருர். (இ எ)

**வெளி உலகில்**

## விசித்திர பூனே!

சென்னை நவ. 8

இந்திய டெலிவிஷனு தூரதர்ஷனில் தோன்றியது தீபக் என்ற பூனை.

மியாவ் என்று தான் பூனை கத்தும். 'தீபக்' என்ற பெயருள்ள பூனை நயினு என்றும் கத்தும்.

அது மட்டும் அல்ல டடி, மம்மி என்றும் கத்தும்.

பேசும் பூனை அது. சென்னையில் வசித்து வரும் திருமதி விஜயா தேவியின் வளர்ப்புப் பூனை தீபக்.

பூனையின் திறமை சென்னை தூரதர்ஷன் அதிகாரிகளுக்கு எட்டியது.

உடனடியாக பூனையின் பேச்சை விடியோ படம் எடுத்து தூரதர்ஷனில் போட்டுக் காட்டினுர்கள்.

'தூரதர்ஷனில் தோன்றி மகிழ்ச்சியோ என்னவோ, மறுநாள் 'தீபக்' இறந்துவிட்டது (இ-எ)

## இலங்கை திரும்பிய அகதிகள் பலர் மீண்டும் தமிழ்நாடு வந்துவிட்டனர்

புதுடில்லி, நவம்பர் 8

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பிச் சென்ற சுமார் 5300 இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலோர் மீண்டும் தமிழ்நாடு வந்து விட்டனர்.

இப்படி தமிழக அரசு அறிவித்து இருப்பதாக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் அகதிகள் கௌரவமாக இலங்கைக்கு திரும்பிச் சென்று சுயமரியாதையுடன் சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும்படி இந்தியா, இலங்கை அரசைக் கேட்டுள்ளது என்றும் பூட்டாசிங் சொன்னுர்.

தமிழகத்தில் தங்கி உள்ள ஒன்றேகால் லட்சத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக மத்திய அரசு இதுவரை 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டுள்ளதாகவும் அமைச்சர் பூட்டாசிங் சொன்னுர். (இ-எ)

## ரகசியம் வெளியிட்ட 6 இந்தியருக்குச் சிறை

புதுடில்லி நவ 5

இந்திய பாதுகாப்பு பொருளாதார ரகசியங்களை அமெரிக்க ராஜதந்திரிகளுக்கு வழங்கிய குற்றத்துக்காக 6 இந்தியர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது

ஆலோசனைப் பொறியியலாளரான திரு. சி. ஈ. மேத்தாவே அமெரிக்க ராஜதந்திரிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே தரகராக இருந்து வந்தார் என்று வழக்கு விசாரணையில் கூறப்பட்டது.

மேத்தாவுக்கு 6 வருடச் சிறைத் தண்டனையும் ஏனையோருக்கு தலா 5 ஆண்டு சிறைத் தண்டனையும் புது டில்லி நீதிபதி இ. எம். ரேும்ஸினுல் கடந்த புதன் கிழமை விதிக்கப்பட்டது.

1977இல் இவர்கள் கைது செய்யப்பட்டனர் கடந்த 9 ஆண்டுகளாக வழக்கு விசாரணை நடந்தது. (இ-எ)

# உள்ளது அழியாது இல்லாதது தோன்ருது

## இந்த கொள்கையின் உயிர்நாடியே கந்தபுராணம்

யாழ்ப்பாணம், நவ. 9

''உள்ளது அழியாது இல்லாதது தோன்ருது'' என்ற சற்காரிய வாதக் கொள்கையின் உயிர் நாடியே கந்தபுராணம்.

வித்துவான் வசந்தா வைத்தியநாதன் இப்படிச் சொன்னுர்.

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கந்தஷஷ்டி விழாவின் 5 ஆம் நாள் நிகழ்ச்சியில் 'மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று' என்ற தலைப்பில் பேசிய திருமதி வசந்தா வைத்தியநாதன் மேலும் சொன்னதாவது.

வேதத்தின் மிக நுண்ணிய கருத்துக்களை எல்லாம் மிக விரிவாக மக்களின் மனத்தில் மிக ஆழமாக ஊன்றுமாறு உரைப்பது புராணங்கள். புராணங்கள் 18. அதிலே ஸ்காந்தம் மட்டும் 1 லட்சம் கிரந்தம். மற்றைய 17 உம் 3 லட்சம் கிரந்தங்கள் என்று சொன்னுல் கந்தனின் பெருமை நூலளவிலும் பெரிது என்பதை உணர்கின்ரேும்.

கந்தபுராணம் இடித்துரைக்கும் நீதி செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை. சூரபன்மன் மாற்ருன் மனைவியை விழையவில்லை. பொய்யுரைக்கவில்லை. பிறர் பொருளை வவ்வவில்லை. கொலை செய்யவில்லை. பின் என்ன செய்தான்? செய்ந்நன்றி கொன்ருன். அதனுல் அந்நன்றியே அவனைக் கொன்றது.

சூரன் ஆணவமலம் சிங்கன் கன்மமலம், தாரகன் மாயாமலம். இம் மூன்று மலங்கள் ஆன்மாவைப் பிணித்திருப்பவை.

ஆணவ மலத்தைப் போக்குவதற்காகவே மற்றைய இரு மலங்களையும் இறைவன் நமக்குக் கொடுத்திருக்கின்ருன்.

முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல, வைரத்தை வைரத்தால் வெட்டுவதைப் போல, துணி அழுக்கை உவர் அழுக்கால் போக்குவதைப் போல ஆணவத்தைப் போக்கக் கன்மமும், அதனைக் கழிக்க வல்ல மாயா மலத்தையும் ஆண்டவன் அருளியிருக்கின்ருன்.

கன்ம மலத்தையும், மாயா மலத்தையும் புண்ணிய கருமங்கள் செய்தும், வழிபாடுகள் இயற்றியும் போக்கிக் கொள்ளலாம். ஆனுல் ஆணவ மலம் அழியாது. ஞானம் உதயமான இடத்து ஆணவம் அடங்கும்.

தாரகனும், சிங்கனும் அழிந்தார்கள். சூரன் அழியவில்லை. கந்தப் பெருமானுடைய ஞான சக்தியாகிய வேலாயுதம் பட்ட இடத்து ஆணவம் குன்றி சேவலும், மயிலு ாக முருகனுக்கு ஆட்பட்டான்.

—இப்படி திருமதி வசந்தா வைத்தியநாதன் கூறி முடித்தார். (இ-எ)

## சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை, நவ. 9

சண்டிலிப்பாய் சிரணி திருவருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருக்கோவில் சங்காபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமைகாலை நடைபெறும்.

சிவஸ்ரீ கி. கைலாசநாதக்குருக்கள் (சங்கானை), சிவஸ்ரீ மு. ஜெயந்திநாதக்குருக்கள் (கொக்குவில்) சிவஸ்ரீ நல்லூர் தாசக்குருக்கள் (அராலி), சிவஸ்ரீ ந. ராதாகிருஷ்ணக் குருக்கள் (குப்பிளான்), சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் (மருதனுமடம்) சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் (இணுவில்) ஆகியோர் சங்காபிஷேகக் கிரியைகளை நிறைவேற்றுவார்கள்.

சுன்னுகம் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்களின் விசேட சொற்பொழிவும் கோண்டாவில் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள், அளவெட்டி பத்மநாதன் குழுவினர் ஆகியோரின் விசேட மேளக்கச்சேரியும் இடம் பெறும். (இ-161)

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் பாதைக்கு ரஷ்யா வழிகாட்டுகிறது

### மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சி

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சி சோவியத் ஒன்றியத்தில் நடைபெற்று அறுபத்தி ஒன்பது ஆண்டுகளாகி விட்டன. மனிதவர்க்கத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயம் இப் புரட்சி வெற்றிவாகை சூடிய தன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அக்டோபர் புரட்சி ரஷ்ய மக்களுக்கு மாத்திரமின்றி உலகளாவிய ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சகல நாடுகளினதும் அபிவிருத்திக்கும் அது ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றது.

மாமேதை லெனின் புரட்சி வெற்றி பெற்ற அன்று கூறியதை ஞாபகப்படுத்துவது நல்லது. ''இந்தப் புரட்சியின் முக்கியத்துவம் யாதெனில் முதலாவது எமது சொந்த ஸ்தாபனமான சோவியத் அரசாங்கத்தை நாம் அடைவோம். அதில் முதலாளிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்கள் ஆதிக்கம் வகிப்பார்கள். பழைய அரச இயந்திரம் அடியோடு ஒழிக்கப்படும். சோவியத் ஸ்தாபனங்களின் ரூபத்தில் புதிய நிர்வாக யந்திரம் அமைக்கப்படும் என்ருர்.

> கடந்த வெள்ளிக் கிழமை அக்டோபர் புரட்சியின் 69 ஆவது நினைவுதினம் இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.'


இதன் அடிப்படையில் சோவியத் அரசு அமைக்கப் பட்டது.

அது காலவரை அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்கள் சரித்திரத்திலேயே முதன்முதலாக தங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட அரசை அமைத்தார்கள். உழைக்கும் மக்களின் வாழ்க்கை தரமும் படிப்படியாக உயர்ந்தது அவர்களுக்கென கலை கலாசார

**சி. விஜயானந்தன்**

(4ஆம் பக்கம் பார்க்க)

**பொய்யாமொழி**



**குறள்:**

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற.

**பொருள்:**

பலிக்காத இடத்தில் (தன்னை விட வலியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு. பலிக்கும் இடத்திலும் (மெலியவரிடத்திலும்) [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாற்றம் அடையுங்கள்

ஆண்டவர் இயேசு பூவுலகில் தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது 'மனமாற்றமடையுங்கள் ... மனமாற்றமடையுங்கள்' என இவ்வுலகைக் கூவி அழைத்தார்.

இந்த உலகம் மனந்திரும்பாவிட்டால் அது



தன்னகத்தே அழிவை வளர்த்துத் தன்னைத் தானே அழிவுக்கெனத் தீர்த்துவிடும் நிலையாகி விடும் என்பதை தூரக் காட்சியாக இயேசுகண்டு மனந்திரும்புங்கள் என்று உலகை வேண்டினுர்.

இன்னமும் இந்த அறைகூவல் உயிர்த்துடிப்போடு எமக்கு விடுக்கப்படுகின்றது. காலதாமதமின்றி நாம் இந்த அழைப்புக்கு இன்றே முகம் கொடுக்க வேண்டும். இல்லையேல் எமது நிலை அழிவை நாமே வாரியழைத்தது போலாகிவிடும்.

பொதுவாக நாம் இந்த அழைப்பை ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட கொடுக்கப்படும் அழைப்பாக மாத்திரம் உணர்ந்தும் உணர்த்தியும் வந்தோம்.

ஆனுல் இது ஒரு தனி மனிதனுக்கு மட்டுமல்ல பலவிதமான அமைப்புக்களோடும் கூடிய சமுதாயத்துக்கும் விடுக்கப்படும் அழைப்பு என்பதை இன்று நாம் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

இன்று எமது சமுதாயத்தின் உண்மை நிலை என்ன? நாம் கட்டிக் காத்து வளர்த்து வந்துள்ள சமுதாயம் ஒரு சீர் பொருந்திய சமுதாயம் என்று கூறிவிட யாருக்குத்தான் துணிவுண்டு,

இன்று எமது சமுதாயத்தின் ஒரு பகுதி சிறப்பாக, நிறைவாக உண்டு, உடுத்து, உறங்க— மறு பகுதி தெருவோரங்களிலும் குப்பை மேட்டினிலும் துடியாய்த் துடிக்கின்றது.

அழகிய பல கல்மாளிகைகள் ஒருபக்கம் சேற்றிலே செருகப்பட்ட குடில்கள் மறுபக்கம்.

அழகிய பல நவீன நாகரிக அணிகள் ஒரு பக்கம், கிழிசலும் கந்தையும் மறுபக்கம்.

மூன்று நேர பதமான உணவுகள் ஒரு பக்கம். அரைவயிற்றுக்கேனும் ஏதேனும் இன்று இல்லையே என்னும் பெருமூச்சு மறுபக்கம்.

அந்தஸ்தும் கௌரவமும் ஒரு பக்கம். தாழ்ச்சியும், வீழ்ச்சியும், கீழ் நிலையும் மறுபக்கம்.

சற்றுச் சிந்திப்போம்; இது இறைவனுக்கு ஏற்புடைய சமுதாயம் தானு, அல்லது மாற்றப்படவேண்டிய சமுதாயம் தானு?

இன்று மற்றவர்கள் வீழ்ச்சியினுல் தான் எமக்கு வளர்ச்சி கிடைக்கின்றது. மற்றவன் கண்ணீரினுல் தான் எமக்குக் குளிர்ச்சி கிடைக்கின்றது. மற்றவன் தோல்வியில்தான் நாம் வெற்றிப் பெருமிதம் அடைகின்ரேும். இந்த நிலை எமக்கு வேண்டுமா? இல்லவே இல்லை.

இன்று அதிகாரத்துக்காகவும் ஆஸ்திக்காகவும், அந்தஸ்துக்காகவும் நடைபெறும் போட்டி வாழ்க்கை உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

இதனுலே சமுதாயத்திற்குள் ஏற்றத் தாழ்வுகள் மலிந்து கொண்டே போகின்றன. இறு நிறுத்தப்படவேண்டும். சமுதாயம் புதுமைபெற வேண்டும்.

ஆம் நாம் மனம் திரும்பவேண்டும். எமது குறுகிய இலட்சியங்கள், சிந்தனைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள்,

(4ஆம் பக்கம் பார்க்க)

**ஞானக்கதிர்**

**அருட்திரு. கே. பி. கோவிந்தராஜ்**

COMPUTER PROGRAMMING
Basic Language
6 Months — Weekends Classes
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

09 - 11 - 1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
Learn from the pioneers in computer education
Fees/ 1500/- (payable in installments)
Practicals in fully air conditioned environment for not less than 60 hours
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# இயக்கங்கள் - கூட்டணி
# ஐக்கிய முன்னணி அவசியம்

## ஜனார்த்தனன் அறிக்கை

சென்னை, நவ. 8

தமிழர் விடுதலை அமைப்புக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஐக்கிய முன்னணிஒன்றை அமைக்க வேண்டும்.

பெங்களூரில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் பேச்சுக்கள் நடத்த உள்ள இச்சந்தர்ப்பத்தில் இந்த ஐக்கிய முன்னணி உருவாவது அவசியம்

இப்படி உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் ரி. ஆர். ஜனார்த்தனன் அறிக்கை விடுத்திருக்கிறார்.

இச் செய்தியை 'இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ளது.

டாக்டர் ஜனார்த்தனன் தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது;

பெங்களூர் சந்திப்பு இலங்கைத் தமிழருக்கு நம்பிக்கை ஒளி ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்படாமல் தடுப்பு முகாம், சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை இலங்கை ஜனாதிபதி விடுதலை செய்யவேண்டும்.

இந்தத் தருணத்தில் தமிழர் அமைப்புக்கள் எல்லாம் ஐக்கிய முன்னணி ஒன்றைத் தோற்றுவிப்பது இன்றியமையாதது.

திம்புப் பேச்சுக்களின் போதுநிலவிய உணர்வை மீண்டும் ஏற்படுத்த வேண்டியது தமிழர் அமைப்புக்களின்கடமை

பேச்சுவார்த்தைகளை நடத்த ஒப்புக்கொள்வதன் மூலம் இலட்சியத்தைக் கைவிட்டுவிட்டதாக தமிழர் அமைப்புக்களை தவறாக எவரும் விளங்கிக்கொள்ள மாட்டார்கள்.

இப்படி டாக்டர் ஜனார்த்தனன் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார் என்று "இந்து" செய்தி கூறுகிறது. (இ-எ)

## பருத்தித்துறை: ஹெலி சுட்டது

பருத்தித்துறை, நவ. 9

பருத்தித்துறையில் நேற்றுக் காலை ஹெலிக்கொப்டர் ஒன்று போராளிகளின் பாதுகாப்பு அரண்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

அச்சமயம் முனை கடற்கரைப்பகுதியில் கட்டுமரத்தில் மீன் பிடித்த மீனவர்களை நோக்கியும் வேட்டுக்களைத் தீர்க்க முற்பட்டபோது அவர்கள் கட்டுமரங்களை விட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர்.

ஹெலிக்கொப்டர் சுமார் 20 நிமிடங்கள் வரை சுட்ட பின்னர் வல்வெட்டித்துறைப் பக்கமாக உயரப் பறந்து சென்றுவிட்டது. (இ-118)

## மன நோயாளி துப்பாக்கிச் சூட்டில் காயம்

பலாலி, நவ. 9

கட்டுவன் சந்தியில் இருந்து பலாலி விமான நிலைய வீதி வழியாகச் சென்ற மனநோயாளி ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

போராளிகள் ஆயுதங்களுடன் செல்வதை அடிக்கடி அவதானித்த மனநோயாளியான திரு. தனபாலசிங்கம் (28 வயது) அரைக் காற்சட்டையுடன் பெல்ற் கட்டியவாறு தடி ஒன்றுடன் தானும் அவ்வீதியால் சென்றார்.

விமான ஓடுபாதைகளிலும், அதற்கப்பாலும் நின்றிருந்த சிப்பாய்கள் குறிப்பிட்ட நபரை நோக்கி சரமாரியாகச் சுட்டனர்.

சூட்டைக்கண்டு பயந்த நிலையில் திரும்பி ஓடி வந்தவருக்கு கையில் மட்டும் ஒருகாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்டநபர் வைத்திய சாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (இ-119)

# 3 முகாம்களில் 2 நாள் விசாரிக்கப்பட்டு விடுதலை

## வயோதிபருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம்

பலாலி, நவ.9

சாதாரண இளைஞர்களைப் போன்று காற்சட்டை, ரீ சேட், சிறிய தொப்பி என்பவற்றுடன் முகாமிற்கு அண்மையில் உள்ள உள்ளூருக்குள் புகுந்து வீதியோரம் பதுங்கியிருந்த இரு சிப்பாய்கள் கட்டுவன் — குரும்பசிட்டி வீதியால் தெல்லிப்பளை வைத்திய சாலையிலுள்ள தனது மனைவியைப் பார்த்து வரச் சென்ற அச்சுவேலியைச் சேர்ந்த வயோதிபரைப் பிடித்துச் சென்றனர்.

பின்பு இரண்டு நாட்களாக முகாமில் வைத்து விசாரித்து அவரை விடுவித்தனர்.

சிப்பாய்கள் பிரஸ்தாப வயோதிபர் திரு. சின்னப்பு செல்லக்கண்டு (60வயது) என்பவரை மூன்று முகாம்களில் வைத்து விசாரித்தபின்பு விடுவித்தனர்.

எமது 'உதயன்' செய்தியாளரிடம் பின்வருமாறு தனது பயங்கர அனுபவத்தை வயோதிபர் விவரித்தார்.

பெய்து கொண்டிருந்த மழையின் மத்தியிலும், நாளாந்தம் செல்லும் வழக்கமான பாதையில் பயமின்றி நான் சென்று கொண்டிருந்தேன்.

இரண்டு இளைஞர்கள் திடீரென்று வந்து எனது சைக்கிளைப் பிடித்தனர்.

''எங்கே போகின்றாய்'' என அவர்கள் என்னை விசாரித்தனர்.

''ஏன் தம்பி இராணுவம் வருகின்றதா?'' என விசாரித்தேன்?

''உனக்கு இராணுவத்தைக் காட்டுகின்றோம், எம்முடன் வா'' என்று அரைகுறைத் தமிழில் பேசி என்னை அழைத்துச் செல்லும்போது தான் அவர்கள் சிப்பாய்கள் என உணர்ந்தேன்.

சைக்கிளை ஒருவன் முன்னால் உருட்டிச் செல்ல என்னை நடுவில் விட்டு மற்றவன் பின்னால் சென்று மரவள்ளித் தோட்டம் ஒன்றுக்குள் புகுந்தான்.

ஏற்கனவே மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகளையும் எடுத்து ஒருவன் தோளில் போட்டுக்கொள்ள தொடர்ந்து என்னை அழைத்து வந்தனர்.

குரும்பசிட்டி இறே சருக்கு அண்மையில் உள்ள ஒரு வீடொன்றில் உள்ள சிறிய இராணுவ முகாம் ஒன்றுக்குள் என்னை அழைத்துச்சென்றனர்.

'கொட்டியா' எனக் கூறிய அவர்கள் முகாம் பொறுப்பாளரிடம் என்னை ஒப்படைத்தனர்.

''போராளிகளுக்கு உளவுபார்க்க வந்தீரா?'' என்று கேட்டு பொறுப்பதிகாரி விசாரித்தார். நான் மறுத்தேன்.

என் கண்கள் சேலையினால் கட்டப்பட்டன.

அவ்விடத்துக்கு விரைந்து வந்த வாகனம் ஒன்றில் நான் ஏற்றப்பட்டேன்.

என்னைச் சுடப்போகின்றார்கள் எனப் பயந்து அழுதேன்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் நான் இறக்கி விடப்பட்டதைப் பின்பு உணர்ந்தேன்.

அங்குள்ள அறை ஒன்றில் நான் அடைக்கப்பட்டேன்.

ஒரு மணி நேரத்தின் பின் என்னிடம் வந்த இராணுவ அதிகாரி ஒருவர் பல படங்களைக் காட்டினார்.

அச்சுவேலியிலுள்ள விடுதலைப்புலிகள் இயக்கப் பொறுப்பாளரின் படமும் காட்டப்பட்டது.

எனக்கு அவர்கள் எவரையும் தெரியாதென்று கூறினேன்.

பின்பு என்னை பலாலி முகாமுக்கும் அழைத்துச் சென்று விசாரித்தனர்.

என்னை வைத்திருந்த அறைக்கு அருகில் இருந்த இரண்டு அறையினுள் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதையும் அவதானித்தேன்.

நான் முகாமுக்கு வெளியே வரும்போது காவலுக்கு நின்ற சிப்பாய்கூட ''இனி போகும் போதாவது கொட்டியா முகாம் எங்குள்ளது என்று கூறுங்கள்'' என்று கேட்டான்.

மரணபயம் ஓரளவு நீங்கிய உணர்வுடன் நான் அதனை மீண்டும் மறுத்து முகாமைவிட்டு எனது சைக்கிளில் வெளியேறி வந்தேன்.

இவ்வாறு கூறினார் அவ்வயோதிபர். (இ 119)

## கிளிநொச்சியில் ஆசிரியர், பெண் உட்பட மூவர் காயமடைந்தனர்

கிளிநொச்சி, நவ. 9

நீரில்மூழ்கித் தவிக்கும் பாடசாலைச் சிறார்களையும் ஏனையோரையும் காப்பாற்ற மரம் ஏற்றிச் சென்றவர்கள் மீது பதுங்கியிருந்த இராணுவம் சுட்டதில் ஆசிரியர், பெண்மணி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

வெள்ளி காலை 8 மணி அளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் ஐ. சிவராசா கையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுடன் வைத்தியசாலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மற்றும் வயோதிபப் பெண்மணி ஒருவரும், வயோதிபர் ஒருவரும் காயமடைந்து கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

இரத்தினபுரம் கிளிநொச்சி பிரதான பாதையில் பாலம் உடைந்து நீர் ஓடுகிறது. இரத்தினபுரம் கிராம மக்கள் பாலத்தில் தற்காலிகமாக இரு மரங்களைப் போடுவதற்காக உழவு இயந்திரம் ஒன்றில் அவற்றை ஏற்றிச் சென்றனர்.

இந்த வேலைக்காக சுமார் 25 பொது மக்களும் உழவுஇயந்திரத்தில் சென்றனர்.

அவ்வாறு சென்ற போதே மக்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

மூவர் தவிர்ந்த ஏனையோர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர், அநாதரவாக நின்ற உழவு இயந்திரத்தை இராணுவம் எடுத்துச் செல்ல முற்பட்டது. பின் உழவு இயந்திரம் ஆற்றினுள் தள்ளி விடப்பட்டிருந்தது.

இச் சம்பவத்தை அடுத்து இராணுவம் இரத்தினபுரம் கிராமத்துள் நுழைந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

இளைஞர் ஒருவர் கைதானதாகக் கூறப்படுகிறது. (இ-76)

## விஜிதரனை விடுவிக்க 12 ஆம் திகதி வரை அவகாசம்

### மாணவர் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், நவ.9

காணமற்போன யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை விடுதலை செய்ய 12 ஆம் திகதி வரை விடுதலை இயக்கங்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாணவர் அமைப்புக்குழு விடுத்த அறிக்கை வருமாறு:-

4-11-86 அன்று கடத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவன் அருணகிரிநாதன் விஜிதரனின் தந்தையார் இன்று (8 ஆம் திகதி) பல்கலைக்கழகத்திற்கு வந்து உபவேந்தரையும் மாணவர் அமைப்புக் குழு பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினார்.

கண்ணீர் மல்கிய நிலையிலே உரையாடும்போது காணப்பட்டார். ''விஜிதரனை விடுதலை செய்யும் வரை தாம் போராட்டத்தை கைவிடப் போவதில்லை'' என மாணவர் பிரதிநிதிகள் அவருக்கு உறுதி கூறியுள்ளனர்.

குடாநாடு இயக்கங்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. குறிப்பிட்ட மாணவன் விஜிதரன் தங்கியிருந்த வீட்டுக்கு அருகிலேயே இயக்கங்களுடைய முகாம்கள் உள்ளன.

இந்நிலையில் இயக்கங்களுக்கு தெரியாமல் விஜிதரன் கடத்தப்பட்டிருப்பார் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாணவர் அமைப்புக் குழு 12 - 11 - 86 புதன் கிழமைவரை விடுதலை இயக்கங்களுக்கு அவகாசம் கொடுத்துள்ளது.

அதற்கிடையில் விஜிதரன் விடுவிக்கப்படாவிட்டால் தீவிரமான போராட்டத்தை அடுத்த கட்டமாக மேற்கொள்வது எனவும் தீர்மானித்துள்ளது.

தொடர்ந்தும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வருகின்ற அச்சுறுத்தல்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஏதோவோர் அரசியலுடன் தொடர்புபட்டவர்கள். அவர்களை அரசியல் காரணங்கள் என்ற போர்வையில் தாக்குவதையும், கடத்துவதையும் எம்மால் அனுமதிக்கமுடியாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அகண்டநாம பஜனை

யாழ்ப்பாணம், நவ 9

திருநெல்வேலி தெற்கில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை அகில உலக அகண்ட நாம பஜனை நடைபெறவுள்ளது.

காலை 7.45 முதல் 8 30 வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியை பிரபல மெல்லிசைப் பாடகர் அமுதன் அண்ணாமலை ஏற்பாடு செய்துள்ளார். (ஒ)

## போர்நிதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான பங்களிப்பு தமிழீழ எல்லைப்பிரதேசங்களில் பரந்து வாழும் மக்களைச் சார்ந்தது.

எமது தலைமைப்பீடத்தைப்பற்றியும் இராணுவ போர்நிதி சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகள் பற்றியும் சில விஷமத்தனமான வதந்திகளைப் பரப்பும் சில நாசகாரக் கும்பலை மக்கள் முன்னால் களைந்தெடுக்கும் பட்சத்தில் எமது கடுமையான ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்தவொரு விடுதலை இயக்கத்துப் போராளிகளுக்கு மக்களால் தாமாகவே விரும்பி வழங்கப்படும் பங்களிப்பை எந்தவொரு தீயகும்பலாலும், ஒடுக்க முடியாது; தடுக்க முடியாது.

இவ்வகையில் எமது முதலாவது ''தமிழீழம் போர் நிதி'' க்கான அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு குறித்த தவணையான இம்மாதம் 10ஆம் திகதி எம்மக்களின் பேராதரவின் மத்தியில் அறிவித்தபடி நடைபெறும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## காயமடைந்த--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7. கே. நாராயணன் (வயது 18) வல்வெட்டித்துறை,

8. எஸ். பிரேமச்சந்திரன்(வயது19)வல்வெட்டித்துறை.

9. வி. இராசரத்தினம் (வயது44) கொம்மாந்துறை,

இவர்களில் கடைசி ஐவரும் பருத்தித்துறை அரசாங்க வைத்திய சாலையில் இருந்து யாழ் பெரியாஸ் பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். (இ-118)

## யாழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் அளிக்கப்படும் போதனைகளும் நடந்தன.

கோட்டையில் இருந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களை ஆட்சேபித்தே இப்போராட்டம்ஆரம்பிக்கப்பட்டது.

இப்போராட்டம் மக்களின் நன்மை கருதி இரண்டுவாரகாலத்துக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ)

## மனமாற்ற .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அபிலாஷைகள், மதிப்பீடுகள் யாவுமே மாற்றப்பட வேண்டும்.

எமது சமுதாயம் பிழைக்க, தளைக்க நாம் மாறித்தான் ஆகவேண்டும்;வேறு வழியேஇல்லை. ஆம் இயேசுவின் அழைப்புக்கு முகம் கொடுப்போமாக. (இ)

## ஒடுக்கப்பட்ட மக்களின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாடுகள் உருவாக்கப்பட்டன மக்களுக்கு நல் வாழ்வு அளிப்பதற்கான பொருளாதார நிலைமைகளையும் உருவாக்கியது.

ஜார் மன்னனின் கீழ் தேசிய இனங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன. எதுவித உரிமையும் அற்ற நிலையில் அடிமைகளாக வாழ்ந்தன. இந் நிலையை அக்டோபர் சோசலிசப் புரட்சி மாற்றியமைத்தது. சோவியத் யூனியனில் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் நிலை அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. இதனால் உலகில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் விடுதலைப்பாதையில் முன்னேறிச் செல்ல சோவியத் அரசு வழிகாட்டியுள்ளது.

ரஷ்யாவின் மாபெரும் சோசலிசப் புரட்சி சரித்திர யுகத்தின் ஆரம்பத்தைக் குறித்தது. உலகில் முதன் முதல் சோசலிசத்தைக் கட்டியெழுப்பிய நாடு சோவியத் நாடு. அதன் ஆக்கங்கள் இன்று இணையில்லாத அளவிற்கு வளர்ந்துள்ளன.

சோவியத் யூனியனிலும் இதர சோசலிச நாடுகளிலும் நெருக்கடி அற்ற நிலைமை ஒரு புறத்திலும் அனைத்து சமுதாய கொடுமைகளும் தீராத நெருக்கடிகளும் முதலாளித்துவ நாடுகளில் தீராத நோயாக வளர்ந்துள்ளது. ஆகவே உலகின் வளர்ச்சிப் போக்குக்கள் எத்திசையை நோக்கி நகர்கின்றது என்பதனை அறிந்து செயல்படுவதன் மூலம்தான் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும். இதற்கு மாபெரும் அக்டோபர் புரட்சி வழிகாட்டுகிறது.

## கடத்த ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் எந்தப் பிரச்சினையையும் நேருக்கு நேர் அணுகியே தீர்த்து வருகிறோம்.

இம்மாணவன் கடத்தலில் சம்பந்தப்பட்ட சக்திகளும் எதுவித நிபந்தனையுமின்றி இம்மாணவனை விடுதலை செய்து பிரச்சினையை நேருக்கு நேராக அணுகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களின் எந்தவொரு நியாயமான போராட்டத்திற்கும் நாம் எமது முழுமையான ஆதரவை தெரிவிக்கிறோம்.

இந்த மாணவனை விடுவிக்க பல்கலைக் கழக மாணவர்கள் எம்முடன் பூரணமாக ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை மாணவன் விஜிதரன் திடீரெனக் காணமல் போனதையிட்டு யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ)

## விஜிதரன் கண்டு ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணவன் விஜிதரன் பற்றி விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை.

விஜிதரனை தாங்கள் கடத்தவில்லை என்று எல்லா இயக்கங்களும் அறிவித்துள்ளன.

அவர் பற்றிய தகவல்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அறிவித்து உள்ளன.

இயன்றவரை தாமும் தேடுதல் நடத்துவதாக இயக்கங்கள் அனைத்தும் உறுதி அளித்து உள்ளன.

யாழ் பல்கலைக் கழக மாணவர் அதுவும் வெளியூர் மாணவர் காணமற் போனால், கடத்தப்பட்டால் விரிவுரைகளுக்கு மாணவர் சமுகம் தரமுடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் பல்கலைக் கழகம் இயங்க முடியாத நிலைமை ஏற்படும்.

தமிழ் மக்களுக்கு என்று கடந்த 12 ஆண்டுகளாக யாழ் பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. பல பிரச்சினைகள் ஏற்பட்டும் அவற்றை எல்லாம் சமாளித்தும் சுமுகமாக இயங்கி வந்திருக்கிறது.

தொல்லைகள் தொடர்ந்து இடம் பெறுவதும் காணமற் போனவர்கள் கண்டுபிடிக்கப்பட முடியாமல் இருப்பதும் எமது பல்கலைக் கழகத்துக்கு மட்டுமல்ல எமது சமுகத்துக்கும் இழிவான நிலைமையை ஏற்படுத்தும். இது குறித்து பொது மக்களும் கவலை கொண்டுள்ளனர்.

ஆகவே விஜிதரனைக் கண்டுபிடிக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

இல்லாவிடில் பல விபரீத விளைவுகள், சச்சரவுகள் உண்டாகி உயர் கல்விக்கு மட்டுமன்றி பொதுமக்கள் வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும்-

இப்படி துணைவேந்தர் தெரிவித்தார். (இ-எ)

## வல்வையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற இழுவைப் படகு ஒன்றைக் கைப்பற்றி மீனவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு கப்பலுக்கு அருகில் கொண்டு சென்றனர்.

மீனவர் படகுடன் கப்பலை முகாமுக்குக் கடற்படையினர் கொண்டு சென்றனர்.

அச்சமயம் புலிகள் தாக்குதலை நிறுத்திவிட்டனர். மீனவர்கள் தாக்கப்படுவார்கள் என்று கருதியே புலிகள் தாக்குதலை நிறுத்தினர்.

அந்த இடைவெளியில் நான்கு தரம் பொருள்களைக் கப்பலில் இருந்து இறக்கி இராணுவ முகாமுக்கு கடற்படையினர் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

இதற்கு பயன்படுத்தப்பட்ட விசைப் படகுகள் பின்னர் கடற்படையினருடன் திரும்பிச் சென்றன.

பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட மீனவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

பின்னர் கடற்படையினர் கடலில் இருந்து தொடர்ச்சியாக ஷெல், பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நண்பகல் அளவில் 2 ஹெலிக்கொப்டர்கள் ரோந்து புரிய மூன்றாவது ஹெலிக்கொப்டர் புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தியது.

இதில் பாதுகாப்பு அரண் நிர்மூலமாக்கப்பட்டது. போராளி ஒருவர் படுகாயமடைந்தார். போராளியை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற வானின் மீதும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் வான் சாரதி காயமடைந்தார். வான் சேதமடைந்தது.

### ஹெலிக்கொப்டர் சேதம்

இதன் பின்னர் ஹெலிக்கொப்டர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். அப்போது ஹெலிக்கொப்டர் விமானி காயமடைந்தார் என்று தெரிகிறது.

ஹெலிக்கொப்டரின் முன் பக்கம் சேதமடைந்தது. புகை கக்கியவண்ணம் 'ஹெலி' தொண்டமானாறு இராணுவ முகாமில் இறக்கப்பட்டது.

அதன் பின்னர் இரண்டு விமானங்கள் மேலே பறந்தன. அதைத் தொடர்ந்து பீரங்கித் தாக்குதலை கடற்படையினர் மேற்கொண்டனர்.

### கப்பலும் சேதம்

பின்னர் புலிகள் கடற்படைக் கப்பலை நோக்கி பாரிய ஆயுதம் மூலம் தாக்கினர். இதன் காரணமாக ஒரு கப்பல் புகைக்கத் தொடங்கியது.

முப்படைகளின் தாக்குதல்கள் நேற்றுமாலை வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. (இ-எ-160)

## காணவில்லை



செல்வராஜா குணபாலா

செல்வராஜா— குணபாலா என்பவரை 3. 11. 86 முதல் காணவில்லை. இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 8ஆம் வருடம் கல்விபயிலும் செல்லையா விடுதி மாணவர் ஆவர். இவரைக் கண்டவர்கள் உடனடியாக கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

ச. பரமேஸ்வரன்
(சத்திர சிகிச்சைப் பகுதி)
அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

திருமதி
ச. செல்வபாக்கியம்
அரசினர் வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 09 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org